CHENNAI
வியாழன், மார்ச் 9, 2023
3
இந்து தமிழ் திசை

# ஜிப்மரில் 4 சான்றிதழ் படிப்புகளுக்கு வரும் 22-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி**

புதுவை ஜிப்மர் கல்விப்பிரிவு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுச்சேரி ஜிப்மரில் அவசர மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர், சவக்கிடங்கு உதவியாளர், குடல் வாய் பாதுகாப்பு முறை, ரத்த சேகரிப்பு முறை ஆகிய 4 சான்றிதழ் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

படிப்பு காலத்தில் மாதம் ரூ.300-ம், விருப்பப் பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ.3,713-ம் ஊக்கத் தொகையாக வழங்கப் படும்.

இப்பயிற்சி முடித்தால் மதிப்பீடும், சான்றும் தரப்படும். இதுதொடர்பாக மேலும் தகவல்கள் மற்றும் விண்ணப்பங்களுக்கு ஜிப்மர் இணையத்தை (www.jipmer.edu.in) பார்க்கலாம்.

விண்ணப்பங்களை வரும் 22-ம் தேதி மாலைக்குள் ஜிப்மர் கல்வி மையத்தின் மூன்றாவது தளத்தில் நேரிலோ, தபாலிலோ சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த படிப்புக்கு தேர்வு செய்யப்படுவோருக்கான நேர்காணல் வரும் 28-ம் தேதி காலை 9.30 முதல் 10.30 மணி வரை நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
9.3.2023 (வியாழக்கிழமை)

# ஜிப்மரில் சான்றிதழ் படிப்புக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

புதுச்சேரி, மார்ச்.9-

புதுச்சேரி ஜிப்மர் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

ஜிப்மரில் அவசர மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர் (20 இடம்), சவக்கிடங்கு உதவியாளர் (2 இடம்), குடல்வாய் பாதுகாப்பு முறை (8 இடங்கள்), ரத்த சேகரிப்பு முறை (8 இடம்) ஆகிய சான்றிதழ் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். இதில் குடல்வாய் பாதுகாப்பு முறை படிப்புக்கு பி.எஸ்.சி. நர்சிங் படிப்போடு ஒரு வருட அனுபவமும் தேவை. இந்த படிப்புகளுக்கான விண்ணப்பங்களை ஜிப்மர் இணையதளத்தில் (www.jipmer.edu.in) இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேலும் ஜிப்மர் கல்வி பிரிவு அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வருகிற 22-ந்தேதி கடைசி நாளாகும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை நேரிலோ அல்லது பதிவு தபாலிலோ ஜிப்மரின் 3-வது தளத்தில் உள்ள கல்வி பிரிவில் சமர்ப்பிக்க வேண்டும். நேர்காணல் வருகிற 28-ந்தேதி காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை நடை பெறும்.

படிப்பு காலத்திலும், விருப்ப பயிற்சி காலத்திலும் உதவித்தொகை ரூ.300 மற்றும் ரூ.3 ஆயிரத்து 713 வழங்கப்படும். பயிற்சி வகுப்பை முடித்ததும் ஜிப்மர் நிறுவனம் மாணவர்களுக்கு மதிப்பீடும், சான்றிதழும் வழங்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்
மார்ச் 9, 2023 வியாழக்கிழமை

# ஜிப்மரில் சான்றிதழ் படிப்புகளுக்கு விண்ணப்பம் வரவேற்பு

புதுச்சேரி, மார்ச் 9: புதுச்சேரி ஜிப்மர் கல்வி பிரிவு முதல்வர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஜிப்மரில் அவசர மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர், தகுதிவாய்ந்த சவக்கிடங்கு உதவியாளர், குடல் வாய் பாதுகாப்பு முறை, ரத்த சேகரிப்பு முறை ஆகிய சான்றிதழ் படிப்பிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதில் அவசர மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர் - 20, தகுதிவாய்ந்த சவக்கிடங்கு உதவியாளர் - 2, குடல்ரத்தசேகரிப்புமுறை - 8 என 28 இடங்கள் உள்ளன. இப்பயிற்சி 12 மாதங்கள் அளிக்கப்படும். வாய் பாதுகாப்பு முறை பயிற்சி மூன்று மாதங்களுக்கு 2 பேர் வீதம் ஆண்டுக்கு 8 பேருக்கு அளிக்கப்படும்.

படிப்பு காலத்தில் ரூ.300, விருப்ப பயிற்சி காலத்தில் ரூ.3,713 உதவித் தொகை வழங்கப்படும். பயிற்சி வகுப்பை வெற்றிகரமாக முடித்ததும், ஜிப்மர் நிறுவனம் மாணவர்களுக்கு மதிப்பீடும், சான்றிதழும் வழங்கும். மேற்கண்ட சான்றிதழ் படிப்பிற்கான விண்ணப்பங்களை ஜிப்மர் இணையதளத்தில் (*www.jipmer.edu.in*) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஜிப்மர் கல்வி பிரிவு அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கல்வி பிரிவு, மூன்றாவது தளம்,. ஜிப்மர் கல்விமையம், ஜிப்மர் என்ற முகவரியில் நேரிலோ அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலமாக வரும் 22ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இந்த சான்றிதழ் படிப்புகளுக்கு ஜிப்மர் கல்வி மையத்தில் வரும் 28ம் தேதி காலை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை நேர்காணல் நடைபெறும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.